# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.108/2019

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 18–03–2026.

பெயர் = சுப்பாராஜ்

பி.வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் கு.வி.–

(1) வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு மேற்கேயும், கிழக்கேயும் என் அனுபவத்தில் உள்ள சொத்து உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்தின் சர்வே எண். 1309/4 என்றால் சரிதான். அந்த சொத்தை என் அத்தை சுப்பம்மாள் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த சொத்து சுப்பம்மாள் கிரையம் பெற்று அவருடைய வாரிசுகள் அனுபவத்தில் வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு வாய்மொழியாக கொடுக்கப்பட்ட சொத்து என சாட்சி கூறுகிறார். சுப்பம்மாள் கிரையம் பெற்ற பிறகு யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை வாய்மொழியாகவும் கொடுக்கவில்லை அவர்களுடைய வாரிசுதாரர்கள் அனுபவத்தில் உள்ளது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்திற்கு கிழமேல் அளவு புலவரைபடத்தின்படி 38 அடி உள்ளது என்றால் சரிதான்.

(2) தாவாச்சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்தின் கிரையப்பத்திரத்தை பி.வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தில் கிழமேல் அளவு 11.1/2 கெஜம் என உள்ளது என்றால் சரிதான். 34.1/2 அடி வரும் என்றால் சரிதான். கிரையப்பத்திரத்தில் உள்ள அளவை காட்டிலும் 4 அடி கூடுதலாக புலவரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு மேற்கே உள்ள இடத்தை என் பாட்டி (அப்பாவின் அம்மா) கிரையம் வாங்கினார். என் அப்பாவுடன் பிறந்த பெண்வாரிசு சுப்பம்மாள் மட்டும்தான். தாவாச்சொத்திற்கு மேற்கே உள்ள சொத்தைதவிர குருவம்மாளுக்கு பாத்தியமான வேறு சொத்து உள்ளதா என்றால் உள்ளது. என் அப்பாவும், சுப்பம்மாளும் மற்ற சொத்துக்களை பொறுத்து எந்த தேதியில்

வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் ஆமாம். எழுத்தால் எழுதிக்கொள்ளவில்லை என சாட்சி கூறுகிறார். தேதிகள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கும் மேற்கே உள்ள சொத்து என் தந்தைக்கு பாத்தியமானது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குருவம்மாள் கிரையம் வாங்கிய பத்திரத்தைதான் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச்சொத்திற்கு மேற்கே உள்ள சொத்து கிரையப்பத்திரப்படி 9.1/2 கெஜம் என்றால் சரிதான். 28 அடி இருக்கும் என்றால் சரிதான்.

(3) பொதுவாக வீடுகள் கட்டும்போது சுவரை பராமரிக்க கூரையடி போடுவார்கள் என்றால் சரிதான். மேற்கே உள்ள வீடுகளில் மேல்புறமும், கீழ்புறமும் கூரையடி உள்ளது என்றால் கிழக்கே போடப்பட்டுள்ளது மேற்கே போடவில்லை. மேற்கே தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவில் 1.1/2 அடி கூரையடியும் சேர்ந்து உள்ளது என்றால் சரிதான். மேற்கே உள்ள வீடு புலவரைபடத்தின்படி கிழமேல் அளவு 25 அடி உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அளவுகள் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். புலவரைபடத்தின்படி 25 அடி வீடுபோக இருபுறமும் கூரையடிக்கு போக 3 அடி சேர்த்து கிரையப்பத்திரத்தின்படி என் அளவுகள் சரியாக உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1,3 கிரையப்பத்திரங்களின்படி என்னுடைய சொத்தின் அளவுகள் சரியாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கிரையப்பத்திரங்களின்படி என் இடம் சரியான அளவில் உள்ளதால் இரண்டு வீடுகளுக்கும் இடையே உள்ள பகுதி எனக்கு பாத்தியமானதல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1,3 கிரையப்பத்திரங்களின்படி தாவாச்சொத்தில் எனக்கு பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்றால் சரியல்ல.

(4) தாவாச்சொத்து இந்த வழக்கின் வாதியான ராமமூர்த்தியின் தந்தை ராமசாமி கிரையம் பெற்றது அதனை நானும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ன்படி தாவாச்சொத்து வாதியின் தந்தைக்கு பாத்தியப்பட்டு வாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் வடபுறம் கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். அந்த தெருவில் இருந்து தெற்கே சென்றால்தான் வாதியின் வீட்டிற்கு செல்லமுடியும் என்றால் சரியல்ல மேற்கு மற்றும் தெற்கே வீதி உள்ளது வாசல் போட்டுள்ளார் என சாட்சி கூறுகிறார். வாதி குடியிருந்து வரும் வீட்டின் தலைவாசல் தாவாச்சொத்தின் தென்புறம் உள்ளது என்றால் சரிதான். தாவாச்சொத்தின்

தென்புறம் உள்ள பாதையை தான் வாதி பயன்படுத்தி வருகிறார் வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. வாதி குடியிருந்து வரும் வீட்டின் மேல்புறமும், தென்புறமும் வாசல் கிடையாது என்றால் சரியல்ல. தென்புறம் வாசல் உள்ளது என சாட்சி கூறுகிறார். வாதி குடியிருந்து வரும் வீடு தனிச்சொத்து. அதற்கு கீழ்புறம் உள்ள மாட்டுத்தொழுவம் தனிச்சொத்து என்றால் சரியல்ல.

(5) வாதி வீட்டிற்கு வடபுறம் உள்ள தலைவாசல்தான் ஒரே வாசல் வேறு வாசல் இல்லை என்றால் சரியல்ல. வாதி வீட்டின் கீழ்புறம் உள்ள மாட்டுத்தொழுவத்திற்காக தென்புறம் வாசல் உள்ளது. அது வீட்டிற்கான வாசல் கிடையாது என்றால் சரியல்ல. வாதி வீடு தனியாக உள்ளது, மாட்டுத்தொழுவம் உள்ளது இரண்டிற்கும் சம்பந்தமில்லை வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணங்களின்படி தாவாச்சொத்தில் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது வழக்கிற்காக பாத்தியமிருப்பதாக வாதியை நான் இடைஞ்சல் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் தாவாச்சொத்திற்கு கீழ்புறமும் மேல்புறமும் உள்ள சொத்து வாதிக்கு பூர்வீக பாத்தியமான சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 29.01.1997 தேதிய உயில் ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

(6) நான் சொல்வதுபோல் வாய்மொழி பாகம் ஏற்பட்டிருந்தால் அந்த உயில் ஆவணத்தில் விவரத்தை குறிப்பிட்டிருப்பார். உயில் ஆவணத்தில் அவ்வாறு வாய்மொழி பாகம் இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை சாட்சிய சட்டத்தின்படி நிரூபிக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரிதான். அவ்வாறு நிரூபிக்காதபட்சத்தில் மேற்படி ஆவணம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உயில்படி தாவாச்சொத்திற்கு மேற்கேயும், கிழக்கேயும் உள்ள சொத்து எனக்கு பாத்தியமானதல்ல. வழக்கிற்காக உயில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயில் ஆவணத்தில் நான்குமால் விவரம் தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குருவம்மாள், சுப்பம்மாள் கிரையப்பத்தின்படியும், உயில் ஆவணத்தின்படியும் தாவாச்சொத்தில் எனக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது, அனுபவம் கிடையாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தை அபகரிக்க வேண்டும் என்று வாதிக்கு பலமுறை இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் மேற்கே உள்ள சொத்திற்கு மேற்கு மற்றும் கிழக்கே இரண்டு தலைவாசல் உள்ளது

என்றால்சரிதான். பொதுவாக வீடுகட்டும்போது தெருவை நோக்கி பிரதான தலைவாசல் வைப்பார்கள் என்றால் சரியல்ல. இரண்டு வீடுகளுக்கும் வடக்குநோக்கிதான் தலைவாசல் இருந்தது அதன்பிறகு மாற்றம் செய்து கிழக்கேயும், மேற்கேயும் வைத்துள்ளோம் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S